# வாழைச்சேனைப் பிரதேசத்து திருத்தல பஜனைப் பாடல்கள்



'சிவநெறிப் புரவலர்'
பெ. புண்ணியமூர்த்தி

# வாழைச்சேனைப் பிரதேசத்து திருத்தல பஜனைப் பாடல்கள்

பாடலாக்கம் :

'சிவநெறிப் புரவலர்'

பெ. புண்ணியமூர்த்தி



'சிவநெறிப் புரவலர்'
வெளியீடு
புதுக்குடியிருப்பு,
வாழைச்சேனை.

# நூல் பதிப்புத் தரவுகள்

| | |
|---|---|
| நூலின் பெயர் | : வாழைச்சேனைப் பிரதேசத்து திருத்தல பஜனைப் பாடல்கள். |
| ஆசிரியர் | : பெ.புண்ணியமூர்த்தி |
| நூல் வகை | : தலப்பாடல்கள் |
| பதிப்பு | : முதற்பதிப்பு |
| வெளியீடு | : 'சிவநெறிப் புரவலர்' வெளியீடு, புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை. |
| பிரதிகள் | : 200 |
| கணினித் தட்டச்சு | : எஸ்.ஏ.ஶ்ரீதர் |
| பக்கங்கள் | : vii + 25 |
| விலை | : ரூ. |
| அச்சுப்பதிப்பு | : வணசிங்கா பிரிண்டர்ஸ், மட்டக்களப்பு. |

## ஐங்கரனுக்கு அஞ்சலி

“முன்னவனே ஆனை முகத்தவனே
முத்தி நலம் சொன்னவனே
தூய்மைச் சுகத்தவனே மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே
செஞ்சடையெம் சேகரனே
தற்பரனே நின் தாள் சரண்”

## அணிந்துரை

ஓய்வுபெற்ற பாடசாலை அதிபரும், பிரபல சோதிடரும், ‘சிவநெறிப் புரவலர்’ என்னும் விருதினைப் பெற்றவரும் சிறந்த சமயச் சொற்பொழிவாளரும் ஆகிய உயர்திரு பெ.புண்ணியமூர்த்தி ஐயா அவர்களின் இருபத்தைந்து தெய்வத் தலங்களின் பேரில் இயற்றப்பட்ட பக்திப் பஜனைப் பாடல்கள் அடங்கிய தொகுப்பு நூலிற்கு அணிந்துரை வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

பல்கலைக்கழகத்தில் படித்து ஒருவர் பட்டம் பெறலாம். ஆனால் அவரால் எழுத்தாளர் ஆகிவிட முடியாது. ஒரு சிலரைத் தவிர, வைத்தியக் கல்லூரியில் படித்து ஒருவர் வைத்தியராகி விடலாம். ஆனால் எழுத்தாளர் ஆகிவிட முடியாது. ஒரு சிலரைத் தவிர. தொழினுட்பக் கல்லூரியில் படித்து ஒருவர் தொழினுட்பவியலாளராகி விடலாம். ஆனால் அவரால் எழுத்தாளராகி விட முடியாது. ஒரு சிலரைத் தவிர. கவிதை எழுதுபவர், சிறுகதை எழுத மாட்டார். சிறுகதை எழுதுபவர் நாடகமோ, நாவலோ எழுத மாட்டார். நாவல் எழுதுபவர் வரலாற்று நூலினை எழுதமாட்டார். ஆனால் இத்தொகுப்பு நூலின் ஆசிரியர் பல்கலையிலும் சிறந்தவராக உள்ளதனை என்னால் அறிய முடிகின்றது. ‘கருவில் திருவுடையவர்களால்’ இதனைச் செய்ய முடியும்.

நான் எனது சிறுபராயம் முதலாக இப்பெரியவர் பற்றி நன்கு அறிந்துள்ளேன். எந்த தெய்வ சந்நிதானத்தில் பூசைகள், திருவிழாக்கள் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் நான் இவரைப் பார்த்திருக்கின்றேன். பல கோவில்களில் தலைவராகவும் செயலாள ராகவும் பல வருட காலங்கள் பதவி வகித்துள்ளார். இன்று வரையி லும் கோவில் நிருவாகங்களில் பல பதவிகளையும் வகித்து வருகின்றார்.

வாழைச்சேனைப் பிரதேசத்தில உள்ள ஒரு பிரபல்யமான வைத்தியப் பரம்பரையிலும் சோதிடர் பரம்பரையிலும் கருவாகி உருவாகிய இவரும் சிறந்த ஒரு சோதிட நிபுணராகவேயுள்ளார். இவர் பெற்றுள்ள 'சிவநெறிப் புரவலர்' என்கின்ற பட்டமானது வாழைச்சேனைப் பிரதேச செயலாளர் பிரிவிலோ மட்டக்களப்பு மாவட்டத்திலோ எவருக்கும் இதுவரையில் கிடைக்காத ஒரு பட்டம் என நான் கருதுகிறேன். வேறு ஒரு சிலரும் பெற்று இருக்கலாம்.

வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவில், உள்ள கலைஞர்களைத் தேடிக் கண்டு பிடித்து பிரதேச செயலகத்திடம் கையளித்து அவர்களைக் 'கௌரவக் கலைஞர்'களாக ஆக்கும் பணிகளில் ஈடுபடுபவர்களில் நானும் ஒருவனாகவுள்ளேன். பிரதேச செயலகத்தின் (வாழைச்சேனை) கலாசாரப் பேரவையின் உபதலைவராகவும் இயங்கி வருகின்றேன்.

அவ்வகையில் 2010ஆம் ஆண்டிற்கான கௌரவக் கலைஞர் விருது பெறுபவர்களில் ஒருவராக திரு.பெ.புண்ணியமூர்த்தி அவர்களையும் நான் தெரிவு செய்து சிபார்சு செய்துள்ளேன் என்பதனையிட்டும் மகிழ்வடைகின்றேன்.

இப்பிரதேசத்தின் கோவில் தலங்களின் பேரில் அன்னார் இயற்றிய பக்திப் பாடல்கள் பலருக்கும் பயன்பெறத் தக்கனவாகும். நான் நினைக்கின்றேன் இப்பிரதேசத்தில் எவரும் இவ்வகையான பக்திப் பாடல்களை இயற்றி தொகுப்பு நூலாக இதுவரையில் வெளியிடவில்லை என்று.

கோவில்களில் பக்திப் பாடல்களின் ஒலி குறைவடைந்து வரும் இந்நாளில் நல்ல தமிழை நாவில் தவழவிட இவர் எடுத்துள்ள இம்முயற்சியை எவ்வளவு பாராட்டினாலும் தகும். இவரது பக்திப் பணியும் தமிழ்ப் பணியும் சிறக்கவும் என்றும் இதுபோன்ற பல நூல்களை எழுதவும் வேண்டுமெனக் கூறி இவரை நான் வாழ்த்துகின்றேன்.

*தாழை செல்வநாயகம்,*
*கல்குடா வீதி,*
*பேத்தாழை,*
*வாழைச்சேனை.*

# அணிந்துரை

கோறளைப்பற்று வாழைச்சேனையை பிறப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வரும் “சிவநெறிப்புரவலர்“ திரு.பெ.புண்ணியமூர்த்தி எனும் பெரியாரின் “வாழைச்சேனைப் பிரதேசத்து திருத்தல பஜனைப் பாடல்கள்“ எனும் நூலிற்கு அணிந்துரை வழங்குவதில் இச்சிறியேனுக்கு கொஞ்சம் பெருமைதான்.

இக்காலத்தில் தோன்றி வளர்ந்திருக்கின்ற இலக்கிய வகைமைகளுள் கவனிக்கப்படாத அல்லது புறக்கணித்து விடப்பட்ட இலக்கியத்துறையே பக்தி - பஜனைப் பாடலாகும். கி.பி.நான்காம் நூற்றாண்டில் களப்பிரர் மற்றும் பல்லவர் ஆட்சியில் பகட்டான சமண, பௌத்த நெறிகளை இப்பக்திப் பாடல்களே பணிய வைத்தன. அதன்பின்னரான ஆட்சி மாற்றத்தினால் பக்திப் பாடல்கள் அவ்வப் பிரதேசத்துக்குள் பதுங்கிக் கொண்டன. மீண்டும் கி.பி. 12ஆம் நூற்றாண்டின் பின் “இரண்டாம் பக்தியுகம்“ என்னுமொன்று காலூன்றிய காலத்தில் தலபுராணங்களின் எழுச்சிகள் மேற்கிளம்பின. உமாபதி சிவாச்சாரியாரின் கோயிற்புராணமே தமிழின் முதலாவது தல புராணமாக பரிணமித்தது. அதனைத் தொடர்ந்து, கி.பி.16ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களின் வருகையினாலும் இந்துமதம் பலவகையிலும் நலிவுற்றது. இவ்வாறு சென்ற நூற்றாண்டின் இறுதி வரையில் சைவம் பல சவால்களையே சந்தித்து வந்துள்ளது. இத்தகைய சவால்களுக்கு முகங்கொடுத்து இந்துசமயத்தை காத்தவர்களில் பலர் சிவநெறிப் புரவலராகிப் போயினர். அவர்களுள் வடக்கில் ஆறுமுகநாவலரும் கிழக்கில் விபுலானந்தரும் என இரு தூண்களும் இந்துமதத்தைத் தாங்கிக் கொண்டனர்.

எனினும் அத்தூண்கள் பலம் பொருந்தியதாயினும் காலப் போக்கில் அவை பலமிழந்து போயின. இத்தகைய பின்னணியிலேயே பிரதேச ரீதியாக தலமூர்த்தியை சிறப்பித்து புராணங்களும், புராண படனங்களும், பஜனைப் பாடல்களும் தோன்றின எனலாம்.

அந்த வகையில் கோறளைப்பற்றுப் பிரதேசத்தில் நான் அறிந்த வரையில் புராணபடனக் கலைஞராகவே அறியப்பட்ட திரு.பெ.புண்ணியமூர்த்தி அவர்களின் இத்தகைய பஜனைப்பாடல் தொகுப்பு முயற்சி இலகுவானதென்று கருதமுடியாது. வாழைச்சேனைப் பிரதேசத்து இந்துக்களின் மத, வழிபாட்டு அடிப்படைகளை எடுத்துக்காட்டும் இந்நூல் ஓர் இனத்தின், ஒரு

சுதேசியத்தின் அடையாளமாக இப்பாடல்களின் மொழி, மத, பண்பாட்டு அம்சங்கள் காணப்படுவதனையும் பாடலாசிரியர் பதிவு செய்துள்ளார்.

வயது முதிர்ந்தாலும் சிந்தனையில் மிகத் தெளிவாகக் காணப்படும் ஆசிரியர் தனது பட்டறிவு மூலம் உண்மைகளை அனுபவங்களை இளைய தலைமுறையினரும் படித்துணரும் வகையில் பாடலாக்கியுள்ளார்.

சிறுவயதில் கோயில் பிரசாதத்துக்காய் கோயில்களுக்கு சென்ற காலத்தில், அன்னார் சிறுவர்களை (என்னையும்) வரிசையில் அமர்த்தி தன் இருபக்கங்களிலும் முன்னாலும் மிக அடக்கமாக பய பக்தியுடன் பாடல்களை சொல்லித்தரும் பாங்கு அலாதியானது. அவர் பஜனைக் கூட்டுப் பிரார்த்தனையிலும் சரி பிரசாதம் வழங்குதலிலும் சரி மிக மிகக் கண்டிப்பானவர். அவரது பண்ணையிலும் வளர்ந்த பலர் இன்று நல்லாசிரியர்களாக, நல்ல மனிதர்களாக வாழ்ந்து சமய - தமிழ்ப்பணி புரிகின்றனர்.

சிவ அடியார்களின் சிவதலப் பாடல்களை சிரமத்துடன் சில பாடசாலைகளில் பாடுகின்றபோது சிவநெறிப் புரவலரின் சிறப்பு பஜனைப் பாடல்களை ஏன் பாட முடியாது? எனவே சைவநெறி ஆசிரியர்கள் இந்நூலை வாங்கிப் பெற்று மாணவர்களின் வெள்ளிக் கிழமைக் கூட்டுப் பிரார்த்தனைகளின் போது பாடவைக்க அதிபர்கள் ஆக்க ஊக்கம் அளிப்பது அன்னாரின் ஆக்க முயற்சிக்கு ஆறுதல் அளிப்பதாக அமையலாம்.

எனவே பாடலாசிரியராக, இசையமைப்பாளராக, சிறந்த பேச்சாளராக, ஆசிரியராக, அதிபராக, புராணபடனக் கலைஞராக, சோதிடராக, சமூக சேவகராக விளங்கும் இவரின் படைப்புலகில் பயணிக்கும் எவரும் ஒரு நல்ல சமயப் பற்றாளராக மட்டுமன்றி, நல்ல மனிதராகவும் வாழ்வர் என்பது எனது நம்பிக்கையாகும்.

உழுவலன்புடன்,
'இளஞ்சைவப் புலவர்'
திரு.எ.த.ஜெயரஞ்சித்,
வாழைச்சேனை.

# அணிந்துரை

கலாசார உத்தியோகத்தர் எனும் ரீதியில் சிவநெறிப் புரவலர் அவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர் கலாபூஷணம் திரு.தாழை செல்வநாயகம் ஐயா அவர்களே.

அதன்பின்னர் ஐயா பற்றிய பாரம்பரிய வரலாற்றினை நான் ஆராய முற்பட்ட போது நீண்டகாலம் அவர் பல வழிகளில் வாழைச்சேனை பிரதேச கல்வி, சமயம் ஆகியவற்றுக்கு பணி புரிந்தமை பற்றி எமது பிரதேசத்தில் வாழும் கிராம சேவையாளர்களின் ஊடாக அறிந்து அவரின் விண்ணப்பங்களை ஏற்று பிரதேச செயலக மட்டத்தில் கலைஞர் எனும் பட்டத்தினையும், தேசிய ரீதியாக கலாபூஷணம் எனும் பட்டத்தினையும் பெற்றுக் கொடுக்க எனது அலுவலக ரீதியான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறேன்.

இவரின் வாழைச்சேனை பிரதேச திருத்தலப் பஜனைப் பாடல்கள் போல் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் உள்ள கலைஞர்கள் முழுமனதுடன் மேற்காணும் பணியை தொடர வேண்டும்.

அவ்வாறான முயற்சி எமது சமயத்தினையும் தமிழினையும் பாதுகாக்கும் முயற்சியாக காணப்படும் என நம்பிக்கை கொள்கின்றேன். மேலும், ஐயா அவர்களின் பஜனைப் பாடல்களின் நூலுக்கு அணிந்துரை வழங்கிய கலாபூஷணம் திரு.தாழை செல்வநாயகம் ஐயா அவர்களும் சரி, இளஞ்சைவப் புலவர் திரு.எ.த.ஜெயரஞ்சித் அவர்களும் சரி. இருவருக்கும் இரு பிரதான ஒற்றுமைகள் உள்ளன. இருவரும் சிறப்பான கலைஞர்கள். ஆனால் கடவுள் கொள்கையில் நம்பிக்கை அற்ற திராவிடக் கொள்கை உடையவர்கள். இருவரும் அணிந்துரையினை இந்நூலுக்கு வழங்கிய மையின் ஊடாக நூலாசிரியரின் சமயப் பணிகள் சிறப்பு உடையதாக உள்ளமையினையும் நேர்மையாக இருப்பதனையும் உணரக் கூடியதாகவுள்ளது.

ஐயாவின் பணிகள் தொடர இறைவன் அருள் கிடைக்கும் எனும் நம்பிக்கை உள்ளது.

கே.எஸ்.ஆர்.சிவகுமார்,
*கலாசார உத்தியோகத்தர்,*
*பிரதேச செயலகம்,*
வாழைச்சேனை.

# முன்னுரை

பல வருடங்களாக வாழைச்சேனை ஸ்ரீ கைலாயபிள்ளையார் ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை செய்து வந்துள்ளேன். அவ்வாறு பிரார்த்தனை செய்யும் பாடல்கள் தென்னிந்தியத் தலங்கள், தெய்வங்களைத் துதிப்பனவாகவே அமைந்திருந்தன. எமது ஊர்க் கோயில்களில் பாடப்படும் பஜனைப் பாடல்கள் எமது ஊர்த் தெய்வங் களைத் துதிப்பனவாக அமைய வேண்டும் என்பது எனது எண்ணம்.

அதனால் முருகனைத் துதிக்கும் "அரகரோகரா சாமி அரகரோகரா" எனும் பாடலை ஒத்ததாக, வாழைச்சேனைப் பிள்ளை யார்க்கு "அரகரோகரா" எனும் பாடலைப் பாடிப் பஜனை செய்வித் தேன். 1994ஆம் ஆண்டு, வாழைச்சேனைப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகத்தின் பின்னரான மண்டலாபிஷேக காலத்தில் "வாழைச் சேனை விநாயகா" எனும் பாடலைப் பாடிப் பஜனை செய்வித்தேன்.

ஒரு சமயம் வாழைச்சேனை ஸ்ரீ கைலாயபிள்ளையார் ஆலயத்தில் சிவராத்திரி தினத்தில் இசைக்குழுவின் பாடகர் ஒருவர் கைலாயப்பிள்ளையார் முன் நின்று "உச்சிப்பிள்ளையார் கோயில் கொண்ட இடம் திருச்சி மலையினிலே" எனப் பாடினார். அது எனக்குச் சரியாகப் படவில்லை. அதனால் எமது பிள்ளையாரைத் துதிப்பதற்காக "வாழைச்சேனையிற் கோயில் கொண்ட விநாயகனே சரணம்" எனும் பாடலைப் பாடினேன்.

இன்னுமொரு சிவராத்திரி தினத்தில், சமயச் சொற்பொழி வாற்றுதற்காக அழைப்பின் பேரில் காகித நகர்ப்பிள்ளையார் ஆலயத் துக்குச் சென்று வந்தபோது, அப்பிள்ளையார் முன் பாடுவதற்காக "காகிதநகரின் கணநாதா" எனும் பாடலைப் பாடினேன்.

ஒரு உற்சவத்தின்போது, சமயச் சொற்பொழிவுக்காக கொண்டையன்கேணிப் பிள்ளையார் ஆலயத்துக்குச் சென்ற நான் "சித்தி விநாயகனே" எனும் பாடலைப் பாடிப் பஜனை செய்வித்தேன்.

கல்குடா நாமகள் வித்தியாலயத்தில் கடமையாற்றும் காலம் (1987) பட்டியடிச்சேனை காளி கோயில் உற்சவத்தின் போது, பஜனைக்காக மாணவர்கள் அழைக்கப்பட்ட போது "காளியைப் போற்றுவோம்" எனும் பாடலை யாத்துக் கொடுத்தனுப்பினேன்.

புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயத்தில் கடமையாற்றும் காலம் (1994 இல்) பத்திரகாளி அம்மன் ஆலய

நவராத்திரி விரத காலம் பஜனைக்காக அழைக்கப்பட்ட மாணவர்களிடம் "புதுக்குடியிருப்புறைபவள்" எனும் பாடலைப் பாடிக் கொடுத்தனுப்பினேன்.

2001இல் புதுக்குடியிருப்பு பத்திரகாளியம்மன் ஆலய மகா கும்பாபிஷேக காலத்தில் "சுகங்கள் தரும் சுந்தரி" எனும் பாடலையும் "ஆதி நீ சோதி நீ" எனும் பாடலையும் பாடிப் பஜனை செய்வித்தேன்.

2003ஆம் ஆண்டு திருவாசக முற்றோதல் நிகழ்ச்சியில் பங்குகொள்ளச் சென்றபோது "சிவகுருநாதா" எனச் சிற்றாண்டிக் கந்தனைப் பாடிப் பஜனை செய்வித்தேன். 2010ல் பேத்தாழை முருகன் ஆலய கும்பாபிஷேகத்தின் திருவிழாவின் போது சமயச் சொற்பொழிவுக்காகச் சென்ற நான் "முருகா சரணம்" எனும் பாடலைப் பாடிப் பஜனை செய்வித்தேன்.

கல்குடா நாமகள் வித்தியாலய வாணி விழாவின்போது (1992ல்) "வாருங்கள் வாணியைப் பாருங்கள்" எனும் பாடலைப் பாடிப் பஜனை செய்வித்தேன். மற்றும் சூழலிலுள்ள கல்குடாப் பிள்ளை யாருக்காக "கல்குடாவின் நாயகா" எனும் பாடலையும், பேத்தாழை வீரையடிப் பிள்ளையாருக்காக "வீரையடி நாதனே" எனும் பாடலையும், பட்டியடிச்சேனைக் கண்ணனுக்காக "பட்டியடிச்சேனைக் கண்ணனே" எனும் பாடலையும், வாழைச்சேனைப் பிள்ளையா ருக்காகப் "பிள்ளையாரப்பா" எனும் பாடலையும் "என்று நீயுமருள் வாய்" எனும் பாடலையும், வாழைச்சேனை மாரியம்மனுக்காக "மாரியம்மா மாரியம்மா" எனும் பாடலையும், பொதுவாக சிவனுக்காக "அன்பருள்ளத்தமர்ந்தவனே" எனும் பாடலையும் முருகனுக்காகச் "சரவணபவனே" எனும் பாடலையும் பாடியுள்ளேன்.

கையெழுத்துருவாகத் தொகுக்கப்பட்டு என்னிடம் இருந்த இப்பாடல்களை அச்சிட்டுப் புத்தகமாக வெளியிடும் படி அன்பர் கலாபூஷணம் தாழை செல்வநாயகம் ஆலோசனை கூறியதற்கிணங்க இவற்றைப் புத்தகமாக வெளியிடுகின்றேன்.

*'சிவநெறிப் புரவலர்'*
*பெ.புண்ணியமூர்த்தி,*
*முன்னாள் அதிபர்,*
சோதிடர்,
*புதுக்குடியிருப்பு,*
*வாழைச்சேனை.*

# பொருளடக்கம்


அணிந்துரை i

அணிந்துரை iii

அணிந்துரை v

முன்னுரை vi

1. வாழைச்சேனை விநாயகா 1
2. பிள்ளையாரப்பா 2
3. அரோகரா 3
4. விநாயகனே சரணம் 4
5. என்று நீயும் அருளுவாய் 5
6. வீரையடி நாதனே 6
7. பிள்ளையாரு பிள்ளையாரு 7
8. காகித நகரின் கணநாதா 8
9. கல்குடாவின் நாயகா 9
10. சித்தி விநாயகனே 10
11. வட்டவானின் பிள்ளையார் 11
12. அன்பருள்ளத் தமர்ந்தவனே 12
13. பட்டியடிச்சேனை கண்ணனே 13
14. காளியைப் போற்றுவோம் 14
15. புதுக்குடியிருப்பு உறைபவள் 15
16. சுகங்கள் தரும் சுந்தரி 16
17. ஆதி நீ – ஆதிசிவனின் பாதி நீ 17
18. வாருங்கள் வாணியைப் பாடுங்கள் 18
19. மாரியம்மா மாரியம்மா 19
20. சரவண பவனே 20
21. முனையிலுறை முருகனே 21
22. சிவகுருநாதா 22
23. முருகா சரணம் 23
24. மாவடியின் மாரியம்மா 24
25. ஆலங்குளத்தமர்ந்தவனே 25

# 1. வாழைச்சேனை விநாயகா

வாழைச்சேனை விநாயகா
வல்லபை நாதா விநாயகா
வாரணமுகவா விநாயகா
வாழும் வழிதா விநாயகா

அங்குச பாசா விநாயகா
அரவணைத்திடுவாய் விநாயகா
ஆகுவாகனா விநாயகா
ஆறுதலைத்தா விநாயகா

இந்திரை மருகா விநாயகா
இன்னலைத் தீர்ப்பாய் விநாயகா
ஈசுரபாலா விநாயகா
ஈந்தருள் புரிவாய் விநாயகா

உமையருள் புதல்வா விநாயகா
உரகமணிந்த விநாயகா
ஊர்தொழு முதல்வா விநாயகா
ஊரினைக் காப்பாய் விநாயகா

எண்குணத்தானே விநாயகா
எருக்கைப்பிரியா விநாயகா
ஏதங்களறுப்பாய் விநாயகா
ஏரம்ப நாதா விநாயகா

ஐந்து கரத்தாய் விநாயகா
அறுமுக சோதர விநாயகா
ஐயனின் அண்ணா விநாயகா
உய்யும் வழிதா விநாயகா

ஒப்பிலா மணியே விநாயகா
ஒற்றைக் கொம்பா விநாயகா
ஓங்கார ரூபா விநாயகா
ஓதா துணர்த்தாய் விநாயகா

ஔவைக்கினிய விநாயகா
அறுகை யுகந்த விநாயகா
அக்க மணிந்த விநாயகா
அகிலத்தைக் காப்பாய் விநாயகா



# உ. பிள்ளையாரப்பா



பிள்ளையாரப்பா எங்க பிள்ளையாரப்பா
பிள்ளையாரப்பா எங்க பிள்ளையாரப்பா

வாழைச்சேனை கோயில் கொண்டாய் பிள்ளையாரப்பா - நாங்கள்
வாழ நல்ல வரமருள்வாய் பிள்ளையாரப்பா

ஆனைமுகம் கொண்டவனே பிள்ளையாரப்பா - அருள்
ஞான வடிவானவனே பிள்ளையாரப்பா

அம்பிகையின் பாலகனே பிள்ளையாரப்பா - என்றும்
நம்பியுந்தன் அடி பணிந்தோம் பிள்ளையாரப்பா

ஊர்கள் தோறும் கோயில் கொண்டாய் பிள்ளையாரப்பா- பல
பேர்கள் கொண்ட பெரியவனே பிள்ளையாரப்பா

பிச்சாடணன் பிள்ளை நீயே பிள்ளையாரப்பா - அன்று
பிச்சிலானின் அடியை உண்ட பிள்ளையாரப்பா

மால் மருகன் நீயல்லவோ பிள்ளையாரப்பா - வடி
வேல் முருகன் சோதரனே பிள்ளையாரப்பா

பிரணவத்தின் சொரூபமானாய் பிள்ளையாரப்பா - உனைச்
சரணடைந்தோர்க் கருளுவாய் நீ பிள்ளையாரப்பா

மூஷிக வாகனமுகந்தாய் பிள்ளையாரப்பா - ஞான
தேசிகனாய் எனக்கருள்வாய் பிள்ளையாரப்பா

வெள்ளிமலை வீற்றிருப்பாய் பிள்ளையாரப்பா - குற
வள்ளிமகள் கொழுந்தன் நீயே பிள்ளையாரப்பா

மோதகத்தைத் தின்பவனே பிள்ளையாரப்பா - மாந்தர்
பேதகத்தைத் தீர்த்தருள்வாய் பிள்ளையாரப்பா

# 3. அரகரோகரா

அரகரோகரா ஸ்வாமி அரகரோகரா
அரகரோகரா ஸ்வாமி அரகரோகரா

ஓம் சக்தி மைந்தனுக்கு அரகரோகரா
ஓங்கார ரூபனுக்கு அரகரோகரா

கணநாதன் கணபதிக்கு அரகரோகரா - எண்
குணநாதன் செல்வனுக்கு அரகரோகரா

பார்வதியின் புத்திரற்கு அரகரோகரா - பல
ஊர்வதியும் உத்தமற்கு அரகரோகரா

அரங்கநாதன் மருகனுக்கு அரகரோகரா
அழகன் முருகன் அண்ணனுக்கு அரகரோகரா

எலியிலேறும் பெருமானுக்கு அரகரோகரா
கலிதீர்க்கும் கடவுளுக்கு அரகரோகரா

ஐயப்பனின் ஐயனுக்கு அரகரோகரா
மெய்யடியார் மெய்யனுக்கு அரகரோகரா



மத்தள வயிறுடையவர்க்கு அரகரோகரா
முத்தமிழ் தரு முதல்வனுக்கு அரகரோகரா

வல்லபை மணவாளனுக்கு அரகரோகரா
வல்லமை பல தருபவர்க்கு அரகரோகரா

கயிலாயப் பிள்ளையார்க்கு அரகரோகரா
கவலைகளைத் தீர்ப்பவர்க்கு அரகரோகரா

வாழைச்சேனைப் பிள்ளையார்க்கு அரகரோகரா
ஏழைக்கின்ப மருள்பவர்க்கு அரகரோகரா

# 4. விநாயகனே சரணம்



வாழைச்சேனையிற் கோயில்கொண்ட
விநாயகனே சரணம்
ஏழையுமை தரு ஏரம்பநாதனே
ஏகதந்தா சரணம்

பனிமலையமர்ந்த பரமசிவன் தரு
பாலகனே சரணம்
கனிமொழி வல்லபை காதலனே எம்
கணேசனே சரணம்

சரணம் சரணம் சண்முகசோதர
சதுர்ப்புஜனே சரணம்
பிரணவ முதலே பிச்சிலானடியுண்ட
பிள்ளையாரே சரணம்

அருகம் புல்லினால் அர்ச்சனையுகந்த
அற்புதனே சரணம்
எருக்கம் பூவினை அணிந்தெமை யாளும்
ஆண்டவனே சரணம்

அன்னை பிதாவே உலகென்றுணர்த்திய
உத்தமனே சரணம்
முன்னை வினை கடி மூஷிக வாகன
மூலவனே சரணம்

ஒற்றை மருப்பினால் பாரதமெழுதிய
பாவலனே சரணம்
கற்றவர் போற்றும் கணபதியே எம்
காவலனே சரணம்

கலியுகம் காக்கும் கடவுளே எங்கள்
கஜமுகனே சரணம்
பலியினைத்தடிந்த பரந்தாமன் திரு
மருமகனே சரணம்

காகமாய் வந்துமே காவிரிதந்த
கருப்பொருளே சரணம்
காசிப முனிக்கருள் காருண்ய சீலநின்
கழலிணைகள் சரணம்

சித்திபுத்தி தரு சித்திவிநாயக
சிற்பரனே சரணம்
பக்தியுடன் பணி செய்பவர்க்கருளும்
பரம்பொருளே சரணம்

தும்பிக்கையினால் துயரம் துடைக்கும்
தூயவனே சரணம்
நம்பிக்கையுடன் நாடினோர்க் கருளும்
நாயகனே சரணம்

# 5. என்று நீயும் அருளுவாய்

பிள்ளையார் பிள்ளையார் என்று போற்றி உன்னைநாம்
என்றுமேத்தித் துதிக்கின்றோம் என்று நீயுமருளுவாய்

காலகாலன் மைந்தனே கற்பகமே உன்னை நாம்
என்றுமேத்தித் துதிக்கின்றோம் என்று நீயுமருளுவாய்

சங்கடங்கள் தீர்ப்பவனே சங்கரியின் பாலனே
என்றுமேத்தித் துதிக்கின்றோம் என்று நீயுமருளுவாய்

ஆல நிழலில் அமர்ந்தவனே மாலவனின் மருகனே
என்றுமேத்தித் துதிக்கின்றோம் என்று நீயுமருளுவாய்

குஞ்சரமுகத்தனே குஞ்சரியின் கொழுந்தனே
என்றுமேத்தித் துதிக்கின்றோம் என்று நீயுமருளுவாய்

முருகனுக்கு மூத்தவனே மூஷிகத்திலேறுமுன்னை
என்றுமேத்தித் துதிக்கின்றோம் என்று நீயுமருளுவாய்

வல்லபை மணவாளனே வாமனரூபனே
என்றுமேத்தித் துதிக்கின்றோம் என்று நீயுமருளுவாய்

கஜமுகனைத் தடிந்தவனே கணபதியே உன்னை நாம்
என்றுமேத்தித் துதிக்கின்றோம் என்று நீயுமருளுவாய்

வெவ்வினைகள் வேரறுக்கும் விநாயகனே உன்னை நாம்
என்றுமேத்தித் துதிக்கின்றோம் என்று நீயுமருளுவாய்

மண்ணினாலும் மாவினாலும் மஞ்சளாலு முண்டை செய்து
என்றுமேத்தித் துதிக்கின்றோம் என்று நீயுமருளுவாய்

அருகம்புல்லைப் பறித்து வந்து அர்ச்சனைகள் செய்துமே
என்றுமேத்தித் துதிக்கின்றோம் என்று நீயுமருளுவாய்

அப்பமவல் எள்ளுண்டை முப்பழங்கள் படைத்துமே
என்றுமேத்தித் துதிக்கின்றோம் என்று நீயுமருளுவாய்

வாழைச்சேனை வாசனே வரங்கள் பெறவேண்டியே
என்றுமேத்தித் துதிக்கின்றோம் என்று நீயுமருளுவாய்

# 6. வீரையடி நாதனே

வீரையடி நாதனே விக்கின விநாயகா
விகட சக்கர நாயகா வினையறுப்பாய் நாயகா

அப்பனேறும் தேரினை அச்சொடித்த நாயகா
முப்பழமும் மோதகமும் முந்தியுண்ணும் நாயகா - வீரையடி

அருகம் புல்லை உவந்தருளும் அற்புத விநாயகா
முருகனுக்கு மூத்தவனே முத்தி தரும் நாயகா - வீரையடி

ஆங்காரம் தீர்த்தருளும் ஆனைமுக நாயகா
ஓங்கார ரூபனே ஓடைக்கரை நாயகா - வீரையடி

ஆலநிழல் அரச நிழல் அமர்ந்தருளும் நாயகா
மாலவனின் மருமகனே மாதங்க விநாயகா - வீரையடி

எங்கள் குறை தீர்க்கவா எலியிலேறும் நாயகா
எங்கும் நிறை நாயகா ஏக தந்த நாயகா - வீரையடி

குட்டிக் குட்டிக் கும்பிடுவோர் குறைகள் போக்கும் நாயகா
பட்டி தொட்டி எங்குமே பவனி வரும் நாயகா - வீரையடி

பாரதத்தைத் தந்தவனே பராபரா விநாயகா
பாடல்களின் முதல்வனே பார் போற்றும் நாயகா - வீரையடி

வாழைச்சேனை வாசனே பேத்தாழையுறை ஈசனே
ஏழையுமை பாலனே ஏரம்ப விநாயகா - வீரையடி

புரந்தரனின் மருகனே புலவர் போற்றும் நாயகா
நிரந்தர முன் அடிபணியும் வரம் தருவாய் நாயகா - வீரையடி




# 7. பிள்ளையாரு பிள்ளையாரு

பிள்ளையாரு பிள்ளையாரு வீரையடிப் பிள்ளையாரு
வீரையடிப் பிள்ளையாரு விகடசக்கரப் பிள்ளையாரு

ஆத்தாளெம் அபிராமியின் அரும்புதல்வனாக வந்து
பேத்தாழை ஊர்சிறக்கப் பெருமை தரும் பிள்ளையாரு
- பிள்ளையாரு...

எலியின் மீதில் ஏறிவரும் ஏரம்பனாம் பிள்ளையாரு
கலிகள் நீக்கிக் காக்கு மெங்கள் கருணை மிகு பிள்ளையாரு
- பிள்ளையாரு...

ஓம் சக்தியின் மைந்தனான ஓடைக்கரைப் பிள்ளையாரு
மகா சக்தியின் பிள்ளையான மாமுகனாம் பிள்ளையாரு
- பிள்ளையாரு...

காகமாக வந்தவர் காவிரியைத் தந்தவர்
காசினியோர் போற்றுகின்ற கரும்பொன் வண்ணப் பிள்ளையாரு
- பிள்ளையாரு...

சண்முகனின் தமையனான தந்திமுகப் பிள்ளையாரு
ஐம்முகனின் தனயனான ஐந்துகரப் பிள்ளையாரு
- பிள்ளையாரு...

தந்தையின் கை மாங்கனியை தந்திரமாகப் பெற்றவர்
முந்தைவினை தீர்த்து நல்ல முத்திதரும் பிள்ளையாரு
- பிள்ளையாரு...

தும்பிக்கையினாலே எங்கள் துயர்துடைக்கும் பிள்ளையாரு
தம்பிதனக் கருள் புரிந்த தற்பரனாம் பிள்ளையாரு
- பிள்ளையாரு...

வல் அசுரர் மாளவும் நல்ல சுரர் வாழவும்
வல்லபையின் கூடவந்து வரமருளும் பிள்ளையாரு
- பிள்ளையாரு...

வள்ளியம்மை கொழுந்தனான வக்ர துண்டப் பிள்ளையாரு
வெள்ளிமலை வீற்றிருக்கும் வேழமுகப் பிள்ளையாரு
- பிள்ளையாரு...

விரும்பும் வரம் தந்தருளும் வீரையடிப் பிள்ளையாரை
வரம்பில் இன்பம் பெறவேண்டி விருப்புடனே வாழ்த்துவோம்
- பிள்ளையாரு...

# 8. காகித நகரின் கணநாதா

கணநாதா எண்குணநாதா கயிலை யமர்ந்த கணநாதா
காகித நகரின் கணநாதா காவலாய் வருவாய் கணநாதா

அப்ப மவல்பொரி அருந்திடுவாய் ஆனைமுகனே கணநாதா
முப்புர மெரித்தோன் முதன்மகனே முத்தமிழ் முதல்வா கணநாதா
-கணநாதா-

அம்பிகை பெற்ற கணநாதா அற்புத நர்த்தன கணநாதா
தம்பிதனக்காய் தினைப்புனத்தில் தந்தியாய் வந்தருள் கணநாதா
-கணநாதா-

தும்பிக்கையா கணநாதா துதிப்போர்க்கருள்வாய் கணநாதா
நம்பிக்கருளிய கணநாதா நலம்தர வருவாய் கணநாதா
-கணநாதா-

ஆலின்கீழே அமர்ந்திருந்து அருள் மழை பொழிவாய் கணநாதா
மாலின் மருகனே கணநாதா மயக்கமறுப்பாய் கணநாதா
-கணநாதா-

சுக்லாம் பரதர கணநாதா சுகம் தரவருவாய் கணநாதா
விக்கினேசா கணநாதா வினைகளறுப்பாய் கணநாதா
-கணநாதா-

சித்தி புத்தியுன் அருகிருக்க சித்திபுத்தி தருநாதா
பக்தி செய்யும் பண்பாளர் பாடிப்பரவும் கணநாதா
-கணநாதா-

சிந்தாமணியே கணநாதா சிந்தை நிறைந்த கணநாதா
நந்தா விளக்கே கணநாதா நல்லோர் போற்றும் கணநாதா
-கணநாதா-

அரவினை யணிந்த கணநாதா அரவணைத்திடுவாய் கணநாதா
வரத கரத்தாய் கணநாதா வரம்பல தருவாய் கணநாதா

# 9. கல்குடாவின் நாயகா

கல்குடாவின் நாயகா கற்பக விநாயகா
கரியமாலின் மருமகனே கலாதரா விநாயகா

அரசின் கீழ் அமர்பவனே அருள்தரு விநாயகா
அரவணிந்த நாதனே அற்புத விநாயகா
- கல்குடாவின்... -

அன்னை தந்த நாயகா அப்பன் போற்றும் நாயகா
அன்னை தந்தை உலகென அறிவு தந்த நாயகா
- கல்குடாவின்... -

கணேசுரா விநாயகா கரும்பொன் வண்ண நாயகா
கந்தனுக்கு மூத்தவனே கஜானனா விநாயகா
- கல்குடாவின்... -

தந்தம் கொண்டு கதையெழுதும் தராதரா விநாயகா
தந்தி முகத்தானவனே தயாபரா விநாயகா
- கல்குடாவின்... -

மகா தேவா நாயகா மகாபலம் தா நாயகா
மகோதரா விநாயகா மங்கல விநாயகா
- கல்குடாவின்... -

மாணிக்க விநாயகா மாதவா விநாயகா
மாந்தர் போற்றும் நாயகா மாமுகவா நாயகா
- கல்குடாவின்... -

பக்தர் போற்றும் நாயகா பரம்பொருள் நீ நாயகா
பதும சுத்த நாயகா பலகலைதா நாயகா
- கல்குடாவின்... -

விக்கின விநாயகா விஷ்வரூப நாயகா
வில்வ நிழல் வீற்றிருந்து வினையறுப்பாய் நாயகா
- கல்குடாவின்... -

## 10. சித்தி விநாயகனே

சித்திவிநாயகனே சித்திபுத்தி நாயகா
பக்தியுடன் பணியுமன்பர்க்கருள் புரி விநாயகா

கொண்டையன்கேணியில் கோயில் கொண்ட நாயகா
கொன்றையணி வேணியனின் மைந்தனே விநாயகா
- சித்தி விநாயகனே -

பிடிநடையா ளுமைதரு பீடுடைய நாயகா
துடியிடையாள் வல்லபையின் நாதனே விநாயகா
- சித்தி விநாயகனே -

அகத்தியருக் கருளிச் செய்த அற்புத விநாயகா
செகத்திலுள்ளோர் சேவிக்கின்ற தேவனே விநாயகா
- சித்தி விநாயகனே -

ஆகுவாகனத்தில் வந்து ஆண்டருளும் நாயகா
பாகும் பருப்பும் பாலுமிவை அருந்திடும் விநாயகா
- சித்தி விநாயகனே -

ஆற்றங்கரையின் மருங்கிலும் அரசமரத்தின் நிழலிலும்
வீற்றிருந்து வினைகள் போக்கும் வித்தகா விநாயகா
- சித்தி விநாயகனே -

ஆலமரத்தின் நிழலினில் அமர்ந்திருக்கும் நாயகா
கோலமயில் வாகனனின் அண்ணனே விநாயகா
- சித்தி விநாயகனே -

ஔவைக்குக் கயிலை வழி காட்டிய விநாயகா
கவ்வைகள் நீக்கியெமைக் காத்தருள் விநாயகா
- சித்தி விநாயகனே -

தந்தம் கொண்டு கதையெழுதும் தந்திமுக நாயகா
சந்ததமெம் சங்கடங்கள் சங்கரிப்பாய் நாயகா
- சித்தி விநாயகனே -

# 11. வட்டவானின் பிள்ளையார்

பிள்ளையார் எம்பிள்ளையார் வட்டவானின் பிள்ளையார்
வட்டவானின் பிள்ளையார் வரமருளும் பிள்ளையார்

மருத நிலத்தமர்ந்திருக்கும் மாமுகனாம் பிள்ளையார்
வரத கரம் காட்டி நல்ல வாழ்வளிக்கும் பிள்ளையார்
- பிள்ளையார்..

அக்கமணி முக்கணனெம் ஐந்துமுகப் பிள்ளையார்
இக்கவரை நற்கனிகள் இனிதருந்தும் பிள்ளையார்
- பிள்ளையார்..

அன்னைமாரி அருகிருக்க அகமகிழும் பிள்ளையார்
முன்னைவினை தீர்த்தருளும் முழுமுதலெம் பிள்ளையார்
- பிள்ளையார்..

ஆலநிழலில் அமர்ந்திருந்து அருள்பொழியும் பிள்ளையார்
வேலவனுக் கண்ணான வேழமுகப் பிள்ளையார்
- பிள்ளையார்..

உன்னியென்றும் வழிபடுவோர் உளமகிழும் பிள்ளையார்
வன்னியிலை அர்ச்சனைக்கு மனமகிழும் பிள்ளையார்
- பிள்ளையார்..

ஏகாம்பரன் எமக்களித்த ஏகதந்தப் பிள்ளையார்
பீதாம்பரம் தரித்தமாலின் பிரியனான பிள்ளையார்
- பிள்ளையார்..

கலைக ளெலாம் தந்தருளும் கலாதரனெம் பிள்ளையார்
மலையினிலே கதையெழுதும் மாதங்கனாம் பிள்ளையார்
- பிள்ளையார்..

சகடசக்கரத் தச்சொடித்த சங்கரனெம் பிள்ளையார்
விகடக்கூத்து ஆடியநல் வித்தகனாம் பிள்ளையார்
- பிள்ளையார்..

சுக்கிலாம்பரம் தரித்த சுந்தரனெம் பிள்ளையார்
விக்கினங்கள் நீக்கும் நல்ல விஷ்வரூபப் பிள்ளையார்
- பிள்ளையார்..

(இவ்வாலயத்தின் அடிக்கல் 1984 காலப்பகுதியில் என்னால் நடப்பட்டது)

# 12. அன்பருள்ளத் தமர்ந்தவனே



அன்பருள்ளத் தமர்ந்தவனே சரணம் சரணம்
அண்ணாமலை அழகனே சரணம் சரணம்
ஆதிரையின் நாயகனே சரணம் சரணம்
ஆலவாயி னமுதனே சரணம் சரணம்

இடர் களையும் எந்தையே சரணம் சரணம்
இன்னிசையில் பிரியவனே சரணம் சரணம்
ஈறில்லாத ஈசனே சரணம் சரணம்
ஈன்றாளின் இனியவனே சரணம்

- அன்பருள்ளத் தமர்ந்தவனே... -

உடுக்கை யேந்தும் பெருமானே சரணம் சரணம்
உண்ணாமுலை உமை பங்கனே சரணம் சரணம்
ஊமத்தம் பூவணிந்தவனே சரணம் சரணம்
ஊழியின் முதல்வனே சரணம் சரணம்

- அன்பருள்ளத் தமர்ந்தவனே... -

எங்கும் நிறை எம்மானே சரணம் சரணம்
எண்ணில்லாத வேடனே சரணம் சரணம்
ஏகம்பத் துறைபவனே சரணம் சரணம்
ஏறூர்ந்த செல்வனே சரணம் சரணம்

- அன்பருள்ளத் தமர்ந்தவனே... -

ஐங்கரனின் தந்தையே சரணம் சரணம்
ஐம்முகனே ஐயனே சரணம் சரணம்
ஒப்பில்லாத ஒளிவடிவே சரணம் சரணம்
ஒற்றியூரில் ஒருவனே சரணம் சரணம்

- அன்பருள்ளத் தமர்ந்தவனே... -

ஓடேந்தி இரந்தவனே சரணம் சரணம்
ஓதாதுணர்பவனே சரணம் சரணம்
ஔடதமாய் அருள்பவனே சரணம் சரணம்
ஔவியம் தவிர்த்தவனே சரணம் சரணம்

- அன்பருள்ளத் தமர்ந்தவனே... -

அக்கமணி மெய்யனே சரணம் சரணம்
அக்கினி கைக்கொண்டவனே சரணம் சரணம்
கங்கையணி வேணியனே சரணம் சரணம்
கயிலைமலை வாசனே சரணம் சரணம்

- அன்பருள்ளத் தமர்ந்தவனே... -

# 13. பட்டியடிச்சேனை கண்ணனே



பட்டியடிச்சேனை வாழும் பக்தர் போற்றும் கண்ணனே
ஆயர்பாடிக் கண்ணனே அருள்புரிவாய் மன்னனே

கண்ணை இமை காப்பது போல் கருணைபுரி கண்ணனே
வெண்ணையுண்ட கண்ணனே மண்ணையுண்ட மன்னனே

கோபாலர் குலம் தழைக்க வந்துதித்த பரமனே
பூபாரம் தணிக்க வந்த பூபாலனே ஈசனே

செந்திரு மணாளனே செங்கமலக் கண்ணனே
நந்த கோபர் வளர்த்தெடுத்த நாராயண மூர்த்தியே

கேசியினைக் கொன்றொழித்த கோவிந்தனே கேசவா
காசினியோர் இன்னல்களைக் களைந்தருள்வாய் மாயவா

குசேலர் பிடி அவலையுண்டு குதூகலித்த நந்தனே
குந்திதேவி மருமகனே குறைகள் தீர்ப்பாய் ஐயனே

அச்சுதனே அமரனே அரங்கநாத வள்ளலே
பச்சைமலை போன்ற மேனி பவளவாய் அழகனே

நச்சரவின் மீது நட்டம் ஆடி நின்ற மாதவா
சச்சரவு நீக்கி இந்த உலகை யாழ்வாய் யாதவா

பகவத்கீதை தந்தாய் பாண்டவரைக் காத்தாய்
பர்வதக் குடைபிடித்த பரந்தாமனே ஐயனே

# 14. காளியைப் போற்றுவோம்

எல்லோரும் வாருங்கள் என்றுமிங்கே சேருங்கள்
காளியம்மை பாதத்தைக் கருத்துடனே போற்றுவோம்

கல்குடாவைக் காக்குமெங்கள் கார்த்திகா தேவியாம்
கற்பகாம்பிகை காட்டும் கவினழகைப் பாருங்கள்
- எல்லோரும்

பட்டியடிச்சேனை வாழும் பக்திமிக்க மாந்தரே
பரமேஸ்வரி பாதத்தைப் பாடிடவே கூடுங்கள்
- எல்லோரும்

அகிலமெல்லாம் காக்குமெங்கள் அகிலாண்ட நாயகி
ஜெகதீஸ்வரி பாதத்தைச் சேவிக்கவே சேருங்கள்
- எல்லோரும்

விக்கினங்கள் நீக்கும் எங்கள் விநாயகனின் தாயினை
விக்கினங்கள் நீக்கவேண்டி விருப்புடனே பாடுவோம்
- எல்லோரும்

வேண்டும் வரம் தருபவள் வேலவனின் தாயவள்
தாண்டவ நடமாடும் தயாபரனின் தேவியை
- எல்லோரும்

கண்குளிரப் பாருங்கள் கௌரியவள் கோலத்தை
காதாரக் கேளுங்கள் காளியவள் சீலத்தை
- எல்லோரும்

வாயார வாழ்த்துங்கள் வாழ்வுதரும் அன்னையை
கைசேர்த்துக் கும்பிடுங்கள் காக்குமெங்கள் காளியை
- எல்லோரும்

புஷ்பராசன் பூசை மகிழ் புனிதமுள்ள தேவியை
புஸ்பம் பலதூவி நாம் பொலிவு பெற வாழ்த்துவோம்
- எல்லோரும்

# 15. புதுக்குடியிருப்பு உறைபவள்



அன்னை காளியைப் பாடுங்கள் முன்னை வினையை வீடுங்கள்
ஆதிபராசக்தியான சோதிரூபியைப் பாடுங்கள்

வாழைச்சேனை அருகிலே நல்வரம் தர வீற்றிருப்பவள்
புதுக்குடியிருப் புறைபவள் புதுமை பல புரிபவள்
- அன்னை

பத்திரகாளியைப் பாடுங்கள் நல்ல புத்திர பாக்கியம் கேளுங்கள்
சுடலைக் காளியைப் பாடுங்கள் பவக்கடலை நீந்தித் தாண்டுங்கள்
- அன்னை

அன்பருள்ளத்துறைபவள் நல்ல இன்பமள்ளித் தருபவள்
தும்பிக்கையன் தாயினை நம்பிக்கையுடன் பாடுங்கள் - அன்னை

எங்கும் நிறை ஈஸ்வரி தங்கவேலன் தாயவள்
சிங்க வாகனத்திலேறும் சங்கரியைப் பாடுங்கள் - அன்னை

மகிஷனை வதைத்துமே மகிதலத்தைக் காத்தவள்
மகேஷ்வரனின் தேவியை மனங்குளிர வாழ்த்துங்கள் - அன்னை

விண்ணும் மண்ணும் போற்றுமெங்கள் வண்ணமகள் காளியை
வண்ண வண்ண மலர்கள் தூவிப் பண்ணமைத்துப் பாடுங்கள்
- அன்னை

# 16. சுகங்கள் தரும் சுந்தரி

சத்திய மாச் சொல்லுகிறேன் கேளுங்க - இங்கே
சக்தி குடியிருக்கா பாருங்க
காலமெல்லாம் நீங்கள் இங்கே வாருங்க - எங்கள்
காளியம்மன் தரிசனமே காணுங்க

கொக்கட்டிய மரநிழலில் இருந்தவள் - இன்று
கோலமிக்க கோயிலில் அமர்ந்தவள்
இக்கட்டுகள் இல்லாதொழிப்பவள் - என்றும்
ஈசனிடப் பாகத்தில் அமைந்தவள் - சத்தியமா -

ஐங்கரனின் அன்னையான அம்மனை - நீங்க
ஆராதித்து ஆறுதலைத் தேடுங்க
நங்கடம் பனைப் பயந்த நாயகி - நாளும்
நலங்கள் பல தந்திடுவாள் நாடுங்க - சத்தியமா -

அங்கயற்கண் அம்மையான கங்காளி - அவள்
சிங்கத்திலே ஏறிவரும் சிங்காரி
சங்கரி சாமுண்டியவளை நம்புங்க - வினைகள்
சங்கரிக்க வேண்டுமென்று வேண்டுங்க - சத்தியமா -

சுடலையிலே நின்றாடும் சுந்தரி - அவளைச்
சுகங்கள் தரவேண்டி நீங்க துதியுங்க
பத்திர காளி உமையவளைப் பாடுங்க - நல்ல
சித்தி புத்தி தந்தருளப் போற்றுங்க - சத்தியமா -

தாமோதரன் தங்கையாம் தயாபரி - இந்தத்
தாரணியோர் போற்றுமெங்கள் ஈஸ்வரி
தாமோதரன் பூசையன்று உகந்தவள் - சிவ
பாலனின்று பூசிக்க மகிழ்ந்தவள்
- சத்தியமா -

புதுக்குடியிருப் பூரிலுறை பூவையை - வண்ணப்
பூக்கள் கொண்டு பூசனைகள் புரியுங்க
புவன மெல்லாம் காக்கும் அன்னை பூரணி - தாயைப்
புகழ்ந்து பாடி வாழ்த்துரைகள் கூறுங்கள்
- சத்தியமா -

# 17. ஆதி நீ - ஆதிசிவனின் பாதி நீ

ஆதி நீ சோதி நீ ஆனைமுகனின் தாயும் நீ
ஆதிசிவனின் பாதி நீ அகிலமுழுதுமாளும் நீ

மேதியானை வதைத்துமே மேதினியைக் காத்த நீ
ஈதியாவு நீக்கியெமை ஈடேற்றுவாய் ஈஸ்வரி - ஆதி நீ -

எங்களை யின்றாதரி செங்கணானின் சோதரி
மங்கள நாயகி மதுரையின் மீனாட்சி நீ - ஆதி நீ -

கங்காளி சாமுண்டி நீ கலைகள் பலவும் தந்திடு
சிங்காரி சிங்காசனி சிறந்த வாழ்வு தந்திடு - ஆதி நீ -

துர்க்கா பரமேஸ்வரி நீ துட்டர்களைத் துரத்திடு
திக்கெலாம் நிறைந்திருந்து திவ்யபதமே தந்திடு - ஆதி நீ -

முக்கனிகள் படைத்துமே மூன்றாய தமிழினால்
எக்கணமுமேத்து மெம்மை என்று நீயே காத்திடு - ஆதி நீ -

சரவணத்தின் கரையின் மீது கந்தனை நீ தந்தனை
அரவணைத்து ஆண்டருளும் ஆனந்த சொரூபி நீ - ஆதி நீ -

தேவர்களின் தேவி நீ தேசோமயமான நீ
தேவயானை மாமி நீ தேவையறிந்தருள் புரி - ஆதி நீ -

புதுக்குடியிருப்பூரிலுறை பத்திரகாளியம்மை நீ
புதுமைகள் புரிந்துனது புத்திரரைக் காத்திடு - ஆதி நீ -

நம்பியுந்தன் அடிபணிந்தோம் நம்பிமகளின் அத்தையே
அம்பிகே தயாபரி நீ அருள்புரிவாய் சித்தியே - ஆதி நீ -

# 18. வாருங்கள் வாணியைப் பாடுங்கள்



வாருங்கள் வாணியைப் பாடுங்கள்
பாடுங்கள் பாரதியைப் பாடுங்கள்

ஔவைக்கருள் அன்புருவாம் அன்னையினைப் பாடுங்கள்
கொவ்வையிதழ் வெண்மையுரு கொண்டவளைப் பாடுங்கள்

கையினிலே ஏடுகொண்ட கலைமகளைப் பாடுங்கள்
மையுருவன் நாரணனின் மருமகளைப் பாடுங்கள்

நாரதனின் தாயினை நலன்கள் வேண்டிப் பாடுங்கள்
நான்முகனின் தேவியை நாவினிக்கப் பாடுங்கள்

பாரிலுள்ளோர் போற்றி மகிழ் பாமகளைப் பாடுங்கள்
நாவிலிருந்தருள் புரியும் நாமகளைப் பாடுங்கள்

புத்தகத்தில் உள்ளுறையும் பூரணியைப் பாடுங்கள்
புத்தி தரும் பூவையினைப் பக்தியுடன் பாடுங்கள்

வெள்ளைக் கமலத்துறை வித்தகியைப் பாடுங்கள்
உள்ளக் கமலத்துறை உத்தமியைப் பாடுங்கள்

# 19. மாரியம்மா மாரியம்மா

மாரியம்மா மாரியம்மா வாருமம்மா மாரியம்மா
வாழைச்சேனை மாரியம்மா வரமருள்வாய் மாரியம்மா

தந்திமுகன் தாயவளே தயாபரியே மாரியம்மா
முந்தைவினை தீர்த்தருள்வாய் முத்து மகமாரியம்மா - மாரியம்மா-

ஆதிசிவன் பத்தினியே ஆரணியே மாரியம்மா
சோதி வடிவானவளே சோதனையேன் மாரியம்மா - மாரியம்மா -

அங்கயற்கண் உமையவளே ஆதிமகமாயி அம்மா
சங்கடங்கள் நீக்கிடுவாய் சங்கரியே மாரியம்மா - மாரியம்மா -

ஈசனுக்கு முத்தெறிந்த ஈஸ்வரியே மாரியம்மா
தேச விளக்கானவளே தேவர்தொழு மாரியம்மா - மாரியம்மா -

கன்னனூரில் வந்தவளே கற்பகமே மாரியம்மா
பன்னுமறைப் பொருளருள்வாய் பகவதியே மாரியம்மா - மாரியம்மா -

காத்தானை ஈன்றவளே காமாட்சியே மாரியம்மா
காத்தருள வேண்டுமம்மா கருணைமிகு மாரியம்மா - மாரியம்மா -

வாரணனின் அருகிருந்து வரமருளும் மாரியம்மா
நாரணனின் தங்கையான நாரணியே மாரியம்மா - மாரியம்மா -

பவனமருள் பார்க்கவியே பார்வதியே மாரியம்மா
புவன முழுதானவளே பூரணியே மாரியம்மா - மாரியம்மா -

மீனவனின் மகளாய் வந்த மீனாட்சியே மாரியம்மா
போனகமாய்ப் பானகம்பால் அருந்திமகிழ் மாரியம்மா - மாரியம்மா -

மாதரி புரந்தரிநீ மாதங்கியே மாரியம்மா
நாத வடிவானவளே நலமருள்வாய் மாரியம்மா - மாரியம்மா -

# 20. சரவண பவனே

சரவண பவ ஓம் சரவண பவ ஓம் சரவண பவனே சண்முகனே
அரவணைத் தெம்மை ஆண்டருள்பவனே ஆனந்த ரூபனே அருள்முகனே

அருணகிரிக்கருள் அற்புத நாதா அமரர்கள் போற்றும் அன்புருவே
வெருகலம் பதியுறை வேலவனே எம் வெவ்வினை அறுப்பாய் மேலவனே

கடப்பமணிந்தாய் கணபதி சோதர கதிரைமலை வீற்றிருப்பவனே
காத்தருள் புரிவாய் கூத்தனின் புதல்வா கார்த்திகேயா காவலனே

குஞ்சரி பாகா குறவள்ளி காந்தா குறிஞ்சிக் குமரா குகபரனே
தஞ்சமென்றடைந்தோம் தணிகைக்குமரா தாந்தாமலையாய் தயாபரனே

செந்தமிழ் முருகா செந்திருமருகா செந்திற் பதியுறை சேவகனே
நந்தம்மை யாள்வாய் நந்தியின் மகனே நல்லூர்ப் பதியுறை நாயகனே

சங்கரிபாலா சன்னிதிவேலா சங்கடம் தீர்க்கும் சற்குருவே
பங்கய நறியா மந்திரப் பொருளைப் பரமனுக்கருளும் பரம்பொருளே

வேடனாய் வந்தாய் வேங்கையாய் நின்றாய் விருத்தனாய் வந்த வேதியனே
பாடலாலேத்தும் பக்தனுக்கருள்வாய் பழனிப் பதியுறை பாவலனே



# 21. முனையிலுறை முருகனே

முனையிலுறை முருகனே முழுமுதலாம் ஒருவனே
மனதிலுறைய வருவாய் மயிலிலேறும் மகிபனே

ஆனைமுகன் தம்பியே ஆறுமுக வேலவா
ஆனையிலும் ஏறுவாய் ஆட்டுக்கடா வாகனா - முனையிலுறை

எந்தை சிவ குருவானாய் எங்கும் நிறை ஈசனே
சிந்தையில் நினைந்தவை சித்தி செய்வாய் ஏசனே- முனையிலுறை

அரவணைப்பாய் எங்களை அம்மை உமை பாலனே
சரவண பவ முருகனே சரணமுந்தன் பாதமே - முனையிலுறை

தமிழர்குல தெய்வமே தயாபரனே முருகனே
தமிழர் மானம் காக்க வாரும் தருணமிது தலைவனே
- முனையிலுறை

தேவதேவர் போற்றுமெங்கள் தேவயானை கணவனே
தேவசேனைத் தலைவனே தேவையருள் தேவனே - முனையிலுறை

நம்பிராசன் மருகனே நங்கை வள்ளி நாதனே
நம்பினோரை ஆதரி நம்பனே கடம்பனே - முனையிலுறை

நெற்றிக் கண்ணன் மைந்தனே நெடியமாலின் மருகனே
வெற்றியெல்லாம் தருவாய் வெற்றிவேற்கை முருகனே
- முனையிலுறை

பழனிமலை ஆண்டியே பவவினை தீர்ஐயனே
பழமும் நீயே யல்லவோ பாலசுப்ரமணியனே - முனையிலுறை

# 22. சிவகுருநாதா

சிவகுரு நாதா எங்கள் சிவகுரு நாதா
சிவகுரு நாதா எங்கள் சிவகுரு நாதா

சிற்றாண்டிக் கந்தனே எம் சிவகுரு நாதா - உன்றன்
நற்றாளிணை பணிந்தோம் சிவகுரு நாதா - சிவகுரு நாதா -

ஐங்கரனின் தம்பியே சிவகுரு நாதா - சிவ
சங்கரியுமை பாலகனே சிவகுரு நாதா - சிவகுரு நாதா -

பரமசிவன் பிள்ளை நீயே சிவகுரு நாதா - அன்று
பிரமதேவனைத் தடிந்த சிவகுரு நாதா - சிவகுரு நாதா -

மாலவனின் மருமகனே சிவகுரு நாதா - வடி
வேலவனே மேலவனே சிவகுரு நாதா - சிவகுரு நாதா -

ஆறுமுக வள்ளலே எம் சிவகுரு நாதா - என்றும்
ஆறுபடை வீடுகொண்ட சிவகுரு நாதா - சிவகுரு நாதா -

திருத்த மாதவர்கள் புகழ் சிவகுரு நாதா - நன்கு
பருத்த தோகை மயிலேறும் சிவகுரு நாதா - சிவகுரு நாதா -

வீரவாகு துணைகொண்டு சிவகுரு நாதா - கொடுஞ்
சூரனை வதைத்தவனே சிவகுரு நாதா - சிவகுரு நாதா -

தினைப் புனத்தை நாடிச் சென்ற சிவகுரு நாதா - அங்கு
தினையும் தேனு முண்டு வந்த சிவகுரு நாதா - சிவகுரு நாதா -

தேவயானை பாகனே எம் சிவகுரு நாதா - குற
வள்ளியம்மை ஒரு பாகா சிவகுரு நாதா - சிவகுரு நாதா -

அன்பருள்ளத் தமர்ந்தவனே சிவகுரு நாதா - அவர்
துன்பங்களைத் துடைத்தருள்வாய் சிவகுரு நாதா - சிவகுரு நாதா -

ஞானப்பழம் நீயல்லவோ சிவகுரு நாதா - அந்த
ஞானத்தி லெமக்கு மருள் சிவகுரு நாதா - சிவகுரு நாதா -

# 23. முருகா சரணம்



முருகா சரணம் முத்துக் குமரா சரணம்
கந்தா சரணம் கதிர் வேலா சரணம்

பேத்தாழை கோயில் கொண்ட முருகா சரணம் - தில்லைக்
கூத்தாடி புதல்வனே உன் மத்தா சரணம்

தும்பிமுகன் தம்பியே எம் துணைவா சரணம் - அன்பர்
துன்பங்களைத் துடைத்தருளும் சாமி சரணம்

அம்பிகையின் பாலகனே அத்தா சரணம் - உனை
நம்பினோரை ஆதரிக்கும் நம்பா சரணம்

அழகனான முருகன் நீயே ஐயா சரணம் - அன்று
கிழவனான குமரனே எம் வேலா சரணம்

ஆறுதலை கொண்டவனே ஆதி சரணம் - என்றும்
ஆறுதலைத் தரவேண்டும் அநகா சரணம்

சரவணத்தில் உதித்த சமீகர்ப்பா சரணம் - எமை
அரவணைத்து ஆண்டருளும் அனந்தா சரணம்

சிங்கார வேலவனே சீலா சரணம் - சூர
சங்காரம் செய்த சக்தி தரனே சரணம்

செங்கணானின் மருமகனே சேயே சரணம் - அன்று
தங்கநாயகம் துதித்த கந்தா சரணம்

தினைப் புனத்தில் தினையும் தேனும் உண்டாய் சரணம் - அனு
தினமும் எம்மை ஆண்டருளும் தீரா சரணம்

தந்தைக் குபதேசம் செய்த குருவே சரணம் - எங்கள்
சிந்தையில் நிறைந்தவனே சித்தா சரணம்

சுண்ண வெண்ணீறணிந்து வரும் சூரா சரணம் - என்றும்
வண்ண மயில் ஏறிவரும் வரதா சரணம்

தேவசேனைத் தலைவனே எம் தேவா சரணம் - நங்கை
தேவயானை நாயகனே நாதா சரணம்

பிரமனைச் சிறையடைத்த பிரானே சரணம் - நல்ல
பரம பதம் தந்தருளும் பாலா சரணம்

# 24. மாவடியின் மாரியம்மா

அம்மா அம்மா மாரியம்மா மாவடியின் மாரியம்மா
மாவடியின் மாரியம்மா வரமருள வாருமம்மா

ஐங்கரனைத் தந்தவளே ஆதிமகமாரியம்மா
எங்கள் குறை தீருமம்மா எங்கும் நிறை மாரியம்மா
- அம்மா அம்மா -

ஐம்முகனின் தேவியே எம் அம்பிகையே மாரியம்மா
சண்முகனின் தாயே எங்கள் சஞ்சலங்கள் நீக்குமம்மா
- அம்மா அம்மா -

அகமகிழ்ந்து அஞ்சல் என்றுன் கிருபைதனைத் தாருமம்மா
சகலகலை வல்லவளே சங்கடங்கள் தீர்ப்பாயம்மா
- அம்மா அம்மா -

அக்கினியில் உதித்தவளே ஆரணியே மாரியம்மா
எக்கிசம் தனில் வளர்ந்த எங்கள் மக மாரியம்மா
- அம்மா அம்மா -

ஆயிரங்கண்ணி நீயே ஆரமுதே மாரியம்மா
வேயுறு புயத்தினளே வேதனைகள் தீருமம்மா
- அம்மா அம்மா -

இமவானின் மகளாய் வந்த ஈஸ்வரியே மாரியம்மா
உமையவளே மாரியம்மா உம்பர் போற்றும் மாரியம்மா
- அம்மா அம்மா -

காத்தருள வேண்டுமம்மா காமாட்சியே மாரியம்மா
பேத்தாழையூரமர்ந்த பெருமை மிகு மாரியம்மா
- அம்மா அம்மா -

நாரணியே மாரியம்மா நலன்களெல்லாம் தாருமம்மா
பூரணியே மாரியம்மா புவனமுழுதாளு மம்மா
- அம்மா அம்மா -

பூவடிகள் பணிந்தெழுந்தோம் பூசனைகள் புரிந்து வந்தோம்
காவடிகளாடி வந்தோம் காவலாக வருவாயம்மா
- அம்மா அம்மா -

மாதவனின் தங்கையான மாதங்கியே மாரியம்மா
மாதரியும் நீயே அம்மா மாண்புமிகு மாரியம்மா
- அம்மா அம்மா -

முத்தெறிந்து விளையாடும் முழுமுதலே மாரியம்மா
தத்தை மொழி பேசி வந்தெம் துயர்களைவாய் மாரியம்மா
- அம்மா அம்மா -

# 25. ஆலங்குளத்தமர்ந்தவனே

ஆலங்குளத் தமர்ந்தவனே முருகா முருகா - ஐயன்
நீலகண்டன் மைந்தன் நீயே முருகா முருகா

ஆரமுத மானவனே முருகா முருகா - கொடும்
சூரர் கிளை மாள வென்ற முருகா முருகா
- ஆலங்குளத்தமர்ந்தவனே-

ஆறுபடை வீடுகொண்ட முருகா முருகா - திரு
நீறணிந்தார் வினை போக்கும் முருகா முருகா
- ஆலங்குளத்தமர்ந்தவனே-

ஆனைமுகன் சோதரனே முருகா முருகா - நல்ல
ஆனையிலும் ஏறிவரும் முருகா முருகா
- ஆலங்குளத்தமர்ந்தவனே-

ஸ்கந்த குருநாதனே முருகா முருகா - நீ
வந்தெமையும் ஆண்டருள்வாய் முருகா முருகா
- ஆலங்குளத்தமர்ந்தவனே-

கார்த்திகேயப் பெருமானே முருகா முருகா - நாங்க
காத்திருந்தோம் வரம் தரவா முருகா முருகா
- ஆலங்குளத்தமர்ந்தவனே-

குறவர் குலம் போற்று மெங்கள் முருகா முருகா - வனக்
குறவள்ளியின் காதலனே முருகா முருகா
- ஆலங்குளத்தமர்ந்தவனே-

சங்கத் தமிழ்ப் பாவலனே முருகா முருகா - சிவ
சங்கரியின் பாலகனே முருகா முருகா
- ஆலங்குளத்தமர்ந்தவனே-

தேவாதி தேவனே எம் முருகா முருகா - எங்கள்
தேவை யறிந் தருள் புரிவாய் முருகா முருகா
- ஆலங்குளத்தமர்ந்தவனே-

நீலமாலின் மருமகனே முருகா முருகா - என்றும்
கோல மயில் ஏறிவரும் முருகா முருகா
- ஆலங்குளத்தமர்ந்தவனே-

வழுதியின் கூன் நிமிர்த்தவனே முருகா முருகா - நாளும்
தொழுது போற்றும் எமக்கருள்வாய் முருகா முருகா
- ஆலங்குளத்தமர்ந்தவனே-



'சிவநெறிப் புரவலர்' திருமிகு.பெ.புண்ணியமூர்த்தி அவர்கள் கோறளைப் பற்றுப் பிரதேசத்தில் சைவ சமய வளர்ச்சிக்காய் பாடுபாடுகின்ற அடியவர்களுள் தலையானவர். 1936.08.21 அன்று பிறந்த இவர், தனது இளமைப்பருவம் முதலே சைவத்தையும், சமய விழுமியங்களையும் தவறாது தானும் கைக்கொள்வதோடு, ஏனைய சைவ சமயிகளும் இதனையே பின்பற்ற வேண்டும் என்கின்ற நோக்கம் கொண்டவர். அதற்காகவே செயற்பட்டு வருகின்றவர். ஆசிரியனாய், நல்ல அதிபனாய் எமது சமூகத்தில் பரவலாக அறியப்பட்ட இவர் தற்போது, தனது இன்னுமொரு பரிமாணத்தை இப்பஜனைப் பாடல்தொகுப்பின் மூலமாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இவரது சமயப் பணியினைச் சிறப்பிக்குமுகமாக 2005ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற 'ஐந்தாவது உலகச் சேக்கிழார் மாநாட்டில் 'சிவநெறிப் புரவலர்' எனும் பட்டம் வழங்கப்பட்டது. 2011ஆம் ஆண்டு கோறளைப்பற்று பிரதேச செயலக கலாசாரப்பேரவை 'கலைஞர்' விருது வழங்கித் தன்னைக் கௌரவித்துக் கொண்டது.

கொழும்பு விவேகானந்த சபையின் ஆயுட்கால உறுப்பினராகவும், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராகவும் விளங்கும் இவர், கோறளைப்பற்று இந்துமகாசபையின் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார்.

தான் கற்ற, கற்பித்த காலங்கள் தொட்டு திருமுறைப் பாசுரங்கள் ஓதுவதிலும், ஓதுவிப்பதிலும் முன்னின்றுழைத்த இவர், நமது பிரதேசத்து ஆலயங்களில் பாடுவதற்கென்று அவ்வவ் தலங்களின், இறைவனின் புகழ் பாடுகின்ற பஜனைப் பாடல்களை இசையுடன் பாடுவதற்கேற்ற முறையில் இயற்றியுள்ளார். 25 பாடல்கள் அடங்கிய இத்தொகுப்புடன் நின்று விடாது, தொடர்ந்து இவரது படைப்புக்கள் நூலுருப் பெற இறைவன் துணை புரிய வேண்டும்.

\- எஸ்.ஏ.ஸ்ரீதர் -

வணசிங்கா பிரிண்டர்ஸ், திருமலை வீதி, மட்டக்களப்பு.